**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No. C.C. No. 21/2025**

**Deposition of Witness for Petitioner PW1 (LW1)**

| | | |
|---|---|---|
| **Name** | : | **மனோஜ்** |
| **Father's Name** | : | **போஜன்** |
| **Village** | : | **கண்ணேரிமுக்கு** |
| **Taluk** | : | **கோத்தகிரி** |
| **Calling** | : | **Manager, IN Tea factory** |
| **Age** | : | **47** |

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**09.07.2026** **Witness Signature :**

**எதிரிகள் ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**முதல் விசாரணை 11.25 A.M**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வருகிறேன். எதிரிகளை எனக்குத் தெரியும். 1ம் எதிரி கணேஷ் எனது முதல் மனைவியின் அண்ணன். 2ம் எதிரி எனது முதல் மனைவியின் அப்பா, 3ம் எதிரி எனது அண்ணணின் மனைவி. கடந்த 2008ம் ஆண்டு 2ம் எதிரியின் மூத்த மகளை எனது அண்ணன் வினோத் திருமணம் செய்து கொண்டார். அவருக்கு 2 பெண் குழந்தைகள் இருக்கிறார்கள். நான் கடந்த 2010 ம் ஆண்டு ஆஜர் 2ம் எதிரியின் 2ம் மகள் கவிதா என்பவரை திருமணம்

செய்து கொண்டேன். எனக்கும் எனது மனைவி கவிதாவுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு குன்னூர் சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து பெற்றுக்கொண்டோம். எனது அண்ணன் வினோத்தும், 3ம் எதிரி கஸ்தூரியும் கடந்த 8 ஆண்டுகளாக பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள். அவர்களின் குழந்தைகள் எனது பராமரிப்பில்தான் இருந்து வருகிறார்கள்.

2. என் அண்ணனின் குழந்தை எங்கள் வீட்டில் இருப்பதால் ஆஜர் 3ம் எதிரி எங்கள் வீட்டிற்கு வந்து அவர்கள் குழந்தைகளை கேட்டு பிரச்சனை செய்தார். ஆனால் அந்த குழந்தைகள் அவருடன் செல்ல மறுத்துவிட்டார்கள். நான் 2022ம் ஆண்டு கங்கா என்ற பெண்ணை 2வதாக திருமணம் செய்து கொண்டேன். எனது அண்ணன் வினோத் டெல்லியில் வேலை செய்து வருகிறார். கடந்த 08.08.2023ம் ஆண்டு சுமார் மாலை 05.00 மணியளவில் நான், எனது அம்மா ராணி, எனது அப்பா போஜன், மனைவி கங்கா மற்றும் குழந்தைகள் ஆகியோர் கண்ணேரிமுக்கில் உள்ள எனது வீட்டில் இருந்தபோது ஆஜர் 3ம் எதிரி எனது வீட்டிற்கு வந்து, எனது வீட்டு வாசலில் நின்றுகொண்டே என்னிடம், எனது குழந்தைகளை வேலைக்காரியை வைத்து பார்த்துக்கொள்கிறாயா, தேவிடியா பயலே என்ற தகாத வார்த்தைகளால் திட்டினார்.

3. அவருக்கு பின்னால் 1ம் எதிரி கணேஷ் வந்தார். கணேஷ் என்னிடம் நீ 2வது திருமணம் செய்து கொண்டு சந்தோசமாக இருக்கிறாயா, தேவுடியா பயலே என்று தகாத வார்த்தைகளால் திட்டினார். பின்னர் அவரது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த கல்லை எடுத்து

எனது தலையில் அடித்தார். எனது வீட்டின் அருகே இருந்த இரும்பு கம்பியை எடுத்து எனது இடது முழங்கையிலும், தலையிலும் பலமாக அடித்துவிட்டார். இதை தடுக்க எனது அப்பா போஜன் அங்கு வந்தார். அங்கு வந்த எனது அப்பாவை கல்லாலும், இரும்பு கம்பியாலும் கையிலும், தலையிலும் அடித்தார். அதன்பின்பு ஆஜர் 2ம் எதிரி அங்கு வந்தார். எனது அப்பாவை அவர் பையில் கொண்டு வந்திருந்த 4, 5 கல்களால் தலையிலும், கையிலும் அடித்தார்.

4. பின்னர் ஆஜர் 3ம் எதிரி 2ம் எதிரியிடம் இருந்து இரும்பு கம்பியை வாங்கி எனது அம்மா ராணியின் இடது தொடையில் அடித்தார். அதில் அவர் வழி தாங்க முடியாமல் சத்தம் போட்டார். எனது வீட்டின் அருகில் இருந்து வடிவேல், ராஜேந்திரன், நடராஜ் ஆகியோர் வந்து தடுத்துவிட்டார்கள். எதிரிகள் அடித்ததில் எனக்கும், எனது அப்பாவுக்கும் பலத்த காயம் ஏற்பட்டு இரத்தம் வந்தது. வடிவேல் என்பவர் எனக்கு சொந்தமான TN 43 D 5739 என்ற பதிவு எண் கொண்ட காரில் என்னையும், எனது அப்பா, அம்மாவையும் மருத்துவமனை அழைத்து செல்வதற்காக காரை எடுத்தபோது, 1ம் எதிரி கணேஷ் இரும்பு கம்பியால் எனது காரின் பின்பக்க கண்ணாடியால் உடைத்துவிட்டார். எங்களை மருத்துவமனை செல்ல விடாமல் தடுத்தார். எதிரிகள் மூவரும் இரும்பு கம்பியை காட்டி, இன்று தப்பித்து கொண்டீர்கள் நாளைக்கு கண்டிப்பாக இரண்டு தலை விழும் என்று மிரட்டினார்கள்.

5. அதன்பின்பு கோத்தகிரி அரசு மருத்துவமனை சென்று கிசிச்சையில் சேர்ந்தோம். அங்கு முதலுதவி சிகிச்சையில் சேர்ந்தோம்.

அப்போது கோத்தகிரி அரசு மருத்துவமனைக்கு கோத்தகிரி போலிசார் வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன்பின்னர் மேல் சிகிச்சைக்காக கோவை ராமகிருஷ்ணா மருத்துவமனையில் நாங்கள் மூன்றுபேரும் சிகிச்சை எடுத்துக்கொண்டோம். தற்போது என்னிடம் காட்டப்படும் கருங்கல்லால்தான் 1ம் எதிரி என்னையும், எனது அப்பாவையும் அடித்து காயப்படுத்தினார். **அந்த கல் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. கணேசன் என்னையும், எனது அப்பாவையும் அடித்து காயம் ஏற்படுத்திய இரும்பு கம்பியை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பெரிதாக உள்ள இரும்பு கம்பிதான் அது. **அந்த இரும்பு கம்பி அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆஜர் 3ம் எதிரி எனது அம்மாவை அடிக்க பயன்படுத்திய இரும்பு கம்பியை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். தற்போது என்னிடம் காட்டப்படும் இந்த சிறிய இரும்பு கம்பியால்தான் 3ம் எதிரி என் அம்மாவை அடித்து காயம் ஏற்படுத்தினார். **அந்த சிறிய இரும்பு கம்பி அ.சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக நான் CCTV Camera Footage மற்றும் நாங்கள் கோவை ராமகிருஷ்ணா மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான மருத்துவ ஆவணங்களை விசாரணையின்போது போலிசாரிடம் ஒப்படைத்துள்ளேன்.

அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

**Sd/– G. Amirdham, 09.07.2026**
**Judicial Magistrate,**
**Kotagiri**